[2012 மே 10

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

வினா வரிசை எண் 250, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

250—

மேல்நிலைப் பள்ளி

*39—**திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை சார்பாக மேல்நிலைப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதியில் புதிதாக மேல்நிலைப் பள்ளி தொடங்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்கள். முதன்முதலாக, மேல்நிலைப் பள்ளி தொடங்குவதற்கு விதிகளின்படி வழிவகையில்லை. இருப்பினும், புதிய தொடக்கப் பள்ளி தொடங்கப்படவேண்டுமெனில், அங்குள்ள மக்கள் தொகை, மாணவ, மாணவியர் எண்ணிக்கை, தற்போது அருகிலுள்ள பள்ளிகளின் எண்ணிக்கை, தூரம், இடவசதி மற்றும் தேவைகளைக் கருத்தில்கொண்டு அனைவருக்கும் கல்வி இயக்கத் திட்டத்தின்கீழ் பள்ளிக் கல்வித் துறையின் மூலமாக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு புதிய பள்ளி தொடங்க நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு

2012 மே 10]

பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுடைய நெஞ்சங்களில் நீக்கமற வாழ்ந்துகொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள், கிராமப்புறங்களிலே வாழ்ந்துகொண்டிருக்கின்ற ஏழையெளிய ஆதி திராவிட மாணவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு, விலையில்லாத மிதிவண்டியை வழங்கி, சீருடைகளையும் வழங்கி, இடைநிற்றலைத் தடுப்பதற்காக 10 ஆம் வகுப்பு, 11 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவியருக்கு உதவித் தொகையையும் வழங்கி, விடுதிகளில் படித்துக்கொண்டிருக்கின்ற மாணவியருக்கு சிறு செலவினங்களுக்குக்கூட நிதி வழங்கி, அவர்களுடைய உணவுப் படியை உயர்த்தி வழங்கியிருக்கிற மாண்புமிகு அம்மா அவர்கள் மானாமதுரையில் ஒரு ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளி துவங்குவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை தொகுதியில் அரசு மேல்நிலைப் பள்ளி ஒன்றும், அரசு உதவி பெறும் உயர்நிலைப் பள்ளி ஒன்றும் மற்றும் மேல்நிலைப் பள்ளி ஒன்றும் ஆகமொத்தம் 3 பள்ளிகளில் 2,570 மாணவ, மாணவியர் கல்வி பயின்று வருகிறார்கள். இதில் 848 மாணவ, மாணவியர் ஆதி திராவிட மற்றும் பழங்குடியின வகுப்பைச் சார்ந்தவர்கள். மானாமதுரையைச் சுற்றியுள்ள கிராமங்களில் சுமார் 900 ஆதி திராவிட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இவற்றில் சுமார் 2,000 மாணவ, மாணவியர் கல்வி பயின்று வருகிறார்கள். புதிய தொடக்கப் பள்ளி தொடங்கவேண்டுமெனில், அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் பள்ளிக் கல்வித் துறையின் மூலமாகத்தான் தொடங்க இயலும். எனவே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி

அம்மா அவர்களின் அரசு புதிய தொடக்கப் பள்ளி தொடங்கிட நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை பேரூராட்சி மற்றும் சுற்று வட்டாரக் கிராமப் பகுதிகளில் சுமார் 30,000-க்கும் மேற்பட்ட ஆதி திராவிட மக்கள் வசித்து வருகிறார்கள். இவர்களெல்லாம் விவசாயத்தை மட்டுமே நம்பி வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே ஒரு அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி மட்டும்தான் உள்ளது. அதோடு ஒரு C.S.I. கிறிஸ்துவ உயர்நிலைப் பள்ளி உள்ளது. மேலும் ஒக்கூர் வெள்ளையன் செட்டியார் மேல்நிலைப் பள்ளி உள்ளது. அரசுப் பள்ளிகள் வேறு ஏதும் இல்லை. ஆகவே விவசாயத்தை மட்டுமே நம்பியிருக்கின்ற அந்த ஆதி திராவிட மக்களின் நலனைக் கருதி மானாமதுரையில் ஒரு ஆதி திராவிடர் நல பள்ளி தொடங்க மாண்புமிகு அம்மா அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மானாமதுரையில் மேல்நிலைப் பள்ளி தொடங்கப்படுமா என்று கோரியுள்ளார். மேல்நிலைப் பள்ளி புதிதாக உடனடியாகத் தொடங்க இயலாது. தொடக்கப் பள்ளிதான் தொடங்க இயலும். எனவே, தொடக்கப் பள்ளி தொடங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 251, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. மோகன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*